# தலைவர் கலைஞர் வழியே தமிழினத்துக்கான கிழக்கு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு!



சென்னை,ஜூன்.4-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளையொட்டி முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:

**எங்கும் எப்போதும் நிரந்தரமென நிறைந்திருப்பது தலைவர் கலைஞரின் பெருமைகளே!**

**செம்மொழி நாளில் தலைவர் கலைஞர் வழியே தமிழினத்துக்கான கிழக்கு என உரக்க எடுத்துச் சொல்வோம்! வெல்வோம்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! டி.சதீஷ்குமார் தலைமையில்

# துறைமுகம் மேற்கு பகுதி சார்பில் ‘செம்மொழி நாள்’ மாபெரும் புகழரங்கம்!

### எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி. – கவிப்பேரரசு வைரமுத்து – இயக்குனர் கரு.பழனியப்பன் புகழுரை!



சென்னை, ஜூன்.4-

சென்னை கிழக்கு மாவட்ட திமுக, துறைமுகம் மேற்கு பகுதி சார்பில், ஜூன் 3 முத்தமிழறிஞரின் 102 வது பிறந்தநாள் “செம்மொழி நாள்” விழாவை முன்னிட்டு - மாபெரும் புகழரங்கம் - கழக உயர்நிலை செயல் திட்ட குழு உறுப்பினர் டாக்டர். எஸ். ஜெகத்ரட்சகன், கவிப்பேரரசு வைரமுத்து, இயக்குனர்.கரு. பழனியப்பன்,கவிஞர் விவேகா ஆகியோர் புகழுரையாற்றினர்.

சென்னை கிழக்கு மாவட்ட திமுக, துறைமுகம் மேற்கு பகுதி சார்பில் ஜூன் 3 முத்தமிழறிஞரின் 102 வது பிறந்த நாள் செம்மொழி நாளை முன்னிட்டு “செம்மொழி -1”இயக்கம் வளர்த்த நம் உயிர்! இயங்க வைத்த முத்தமிழ்! எனும் தலைப்பில் மாபெரும் புகழரங்கம் நேறு (03.06.25 - செவ்வாய்க்கிழமை) மாலை 6 மணியளவில், சென்னை, பாரிமுனை, ராஜா அண்ணாமலை மன்றத்தில் நடைபெற்றது.

இப்புகழரங்கத்தில் வட்ட கழக செயலாளர் டி.சதீஷ்குமார் தலைமை வகித்தார்.

சென்னை கிழக்கு மாவட்டக்கழக செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும அமைச்சர் பி.கே.சேகர்பாபு, எஸ்.முரளி, எஸ்.இராஜசேகர், இரா.நரேந்திரன், ஜி.எம்.தேவன், பி.ஸ்ரீராமுலு, இசட். ஆசாத், எம்.பி.எம். சேக்அப்துல்லா, ஆர்.கலைச்செல்வி, எம்.இ.கனி, எல்.சம்பத்குமார், எம்.வினாயகம், பி.விஜயகுமார், ராஜேஷ் ஜெயின், பா.ஜெகதீஷ் முன்னிலை வகித்தனர்.

துறைமுகம் மேற்கு கிழக்கு வட்ட கழக செயலாளர்கள்: மா.ஜெய்சங்கர், பா.கதிரவன், ஆர்.ரவிச்சந்திரன்பா, அண்ணாதுரை, ஜி.ராமமூர்த்தி, எல்.சத்தியநாராயணன், எஸ்.புகழேந்தி, ஆர்.ஏ.அஸ்லாம், டி.கதிரவன், எம்.பரத்குமார், கே. கவியரசு ஆ.நா.பார்த்திபன் ஆகியோர் வரவேற்றனர்.

இம்மாபெரும் புகழரங்கத் தில் கழக உயர்நிலை செயல் திட்ட குழு உறுப்பினர் டாக்டர். எஸ்.ஜெகத்ரட்சகன், கவிப்பேரரசு வைரமுத்து இயக்குனர் கரு.பழனியப்பன், கவிஞர் விவேகா ஆகியோர் புகழுரையாற்றினர்.

மேலும், இப்புகழரங்கத்தில் மேயர் பிரியா ராஜன், ப.தாயகம் கவி எம்.எல்.ஏ, ஏ.வெற்றியழகன் எம்.எல்.ஏ, ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ, ப.ரங்கநாதன், கே.எஸ். ரவிச்சந்திரன், பி.கே.மூர்த்தி, கே. சந்துரு, கே.எஸ்.எம். நாதன், சி. மகேஷ்குமார். மாவட்ட நிர்வாகிகள்: கோ.ஏகப்பன், தேவஜவஹர், புனிதவதி எத்திராசன், பகுதி கழக செயலாளர்கள்: ஜசிஎப்.வ.முரளிதான், எ. நாகராசன் எம்.சி., செ.தமிழ்வேந்தன், எம்.சாமிக்கண்ணு, வே. வாசு, கூ.பி. ஜெயின், சொ.வேலு எம்.சி., வி.சுதாகர், டி.எஸ்.பி. ராஜகோபால் எம்.சி, எம்.டி.ஆர். நாகராஜன். சுதா தீனதயாளன். ராஜேஸ்வரி ஸ்ரீதர், வானவில் விஜய், ந. துலுக்கானம், பி.உதயசங்கர், தாமோதரன், எல்.பி.எப். மோகன், பெரோஸ்கான், வெ.பரிமளம், எல். நவீன். பகுதி கழக நிர்வாகிகள்: மே.ஜனார்தனன், கே.ஆர். அபரஞ்சி, ம.முத்துக்குமார், ந.சுந்தரம், எஸ்.சந்தியாகு, செ.தமிழ்வாணன், வி.சந்தானலட்சுமி, சி.ப.ஜெயராமன் பூக்கடை.எஸ்.வெங்கடேசன், எல்.சாந்திலால். ஆகியோர் சிறப்பித்தனர்.

வட்ட கழக செயலாளர் சேப்பாக்கம் வே.பா.பிரபாகரன் நன்றி கூறினார்.



தமிழ்நாட்டின் சிற்பி முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாளை முன்னிட்டு திருவள்ளூர் நகராட்சி அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஆகியோர்களின் திருஉருவ சிலைகளுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி இனிப்புகள் வழங்கி தனியார் மருத்துவமனையின் மருத்துவ முகாமை திருவள்ளூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.இராஜேந்திரன் துவக்கி வைத்தார். நிகழ்ச்சியில் நகர செயலாளர் சி.சு. ரவிச்சந்திரன், நகர் மன்ற தலைவர் உதய மலர் பாண்டியன், நகர் மன்ற முன்னாள் தலைவர் பொன். பாண்டியன், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் வி.எஸ்.நேதாஜி, ப.கோபால், சி.சு.விஜயகுமார், டி.ஆர். திலீபன், நகர நிர்வாகிகள் ஆ.கமலகண்ணன், எம்.பரசுராமன், டி.எம்.ரவி, டி.என்.ஆர்.சீனிவாசன், நகர்மன்ற உறுப்பினர்கள் டி.செல்வகுமார், த.அயூப் அலி, கு.பிரபாகரன், வி.இ.ஜான், தனலட்சுமி சீனிவாசன், நீலாவதி பன்னீர்செல்வம், சாந்தி கோபி, பத்மாவதி சீதரன், ஹேமலதா நரேஷ், சார்பு அணிகளின் நிர்வாகிகள் கோபி, ஜி.பாண்டியன், ராயல் பாஸ்கரன், பா.இராஜி, ஆ.பவளவண்ணன், ராஜ்பால், என்.நரேஷ் குமார், பாபு மற்றும் கிளை கழக செயலாளர்கள் செல்வதுரை, கு.கிள்ளி வளவன் உள்ளிட்ட கழகத் தோழர்கள் பொதுமக்கள் பெரும் திரளாக பங்கேற்றனர்.





தீவிரவாதத்தை எதிர்த்து போராடும் இந்தியாவின் முயற்சிகளுக்கு ரஷ்யா, ஸ்லோவேனியா, கிரீஸ், லாட்வியா, ஸ்பெயின் ஆகிய நாடுகள் முழு ஆதரவு அளிப்பதாக கனிமொழி கருணாநிதி தலைமையிலான எம்.பிக்கள் குழுவிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது. நேற்றுடன் ஸ்பெயின் நாட்டில் கனிமொழி கருணாநிதி தலைமையிலான எம்பிக்கள் குழுவின் சுற்றுப்பயணம் நிறைவடைந்தது. இந்த நிலையில், நேற்று (03.06.2025) சுற்றுப்பயணத்தை முடித்துக்கொண்டு சென்னை திரும்பிய கனிமொழி கருணாநிதி எம்.பி.க்கு, தி.மு.க. நிர்வாகிகள், தொண்டர்கள் மகளிர் அணி நிர்வாகிகள் உள்ளிட்டோர் விமான நிலையத்தில் பூங்கொத்து வழங்கி, மேளதாளம் ஒலிக்க உற்சாக வரவேற்பளித்தனர்.

### தி.மு.க. ஆட்சியில் ரூ.531 கோடி திட்ட மதிப்பீட்டில்

# கத்திப்பாரா மேம்பாலம் - நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தை கொண்டுவந்து சாதனை படைத்தவர் முத்தமிழறிஞர் கலைஞர்!

## அமைச்சர் தா.மோ.அன்பரசன் புகழாரம்!

*காஞ்சிபுரம், ஜூன்.4-*

*முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தமிழ்நாட்டின் முதல்வராக இருந்தபோது தி.மு.க. ஆட்சியில், ரூ.531 கோடி திட்ட மதிப்பீட்டில் ஆலந்தூர் கத்திப்பாரா மேம்பாலம் நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தை அமைத்து தந்து சாதனை படைத்துள்ளார் என்று அமைச்சர் தா.மோ. அன்பரசன் புகழாரம் சூட்டினார்.*



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்தநாளையொட்டி காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் நந்தம்பாக்கம் வர்த்தக மையம் முன்பு மலர்களால் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திரு உருவப் படத்திற்கு மாவட்டச் செயலாளர் அமைச்சர் தா.மோ. அன்பரசன் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தி, இனிப்புகளை வழங்கினார்.

நந்தம்பாக்கத்தில் அமைந்துள்ள சென்னை வர்த்தக மையத்தை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் திறந்து வைத்து சாதனைபடைத்தது சம்மந்தமாக அமைச்சர் தா.மோ.அன்பரசன் ஆற்றிய உரை:

தமிழ்நாட்டில் தொழில் மற்றும் வர்த்தகத்தை மேம்படுத்த வேண்டும் என்ற நல்ல நோக்கில் 2001ஆம் ஆண்டு முதல்வராக இருந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ரூ. 45 கோடி மதிப்பில் கண்காட்சி மையம் மற்றும் தமிழ்நாடு அரங்கத்துடன் கூடிய சென்னை வர்த்தக மையத்தை திறந்து வைத்தார்.

அப்போது ஒன்றிய வர்த்தகத்துறை அமைச்சராக இருந்து முரசொலி மாறன் அவர்களின் பெரும் முயற்சியால் இந்த வர்த்தக மையம் இங்கு அமைந்தது.

தி.மு.க. ஆட்சியில் முதல்வர் கலைஞர் அவர்களும், ஒன்றிய அமைச்சர் முரசொலி மாறன் அவர்களும் இணைந்து இந்த வர்த்தக மையத்தை கொண்டு வந்தது மிகப்பெரிய சாதனை என்பதை இந்த நேரத்தில் நினைவுபடுத்த விரும்புகிறோம்.

2வது கட்டமாக 2006 - 2011 தி.மு.க. ஆட்சியில் அப்போது தொழில் துறையின் அமைச்சராகவும், மாண்புமிகு துணை முதல்வராகவும் இருந்த, தளபதி மு.க. ஸ்டாலின் அவர்கள் ரூ. 250 கோடி மதிப்பில் சென்னை வர்த்தக மையத்தை விரிவாக்கம் செய்தார்.

3வது கட்டமாக 2021ல் ஆட்சிக்கு வந்தவுடன் நம்முடைய முதல்வர் அவர்கள் ரூ. 380 கோடி மதிப்பில் சென்னை வர்த்தக மைய த்தை விரிவாக்கம் செய்து அனைவரும் போற்றி பாராட்டும் வண்ணம் உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை மிகச் சிறப்பான முறையில் நடத்திக் காட்டினார்.

சென்னை வர்த்தக மையத்தின் அருகில் கடந்த 17.06.2023 அன்று ரூ. 370 கோடி மதிப்பீட்டில் மிகப்பெரிய தொழில் நுட்ப நகரம் அமைக்கும் திட்டப் பணிகள் நம்முடைய முதல்வர் அவர்களால் தொடங்கப்பட்டு பணிகள் வேகமாக நடைபெற்று வருகிறது.

இந்த சாதனைகளுக்கெல்லாம் காரணம் தி.மு.க. ஆட்சி தான். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும், முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களும் தான்.

இவ்வாறு அவர் பேசினார்.

அடுத்து அமைச்சர் தா.மோ.அன்பரசன் அவர்கள் ஆலந்தூர் கத்திப்பாரா அடுக்கு மேம்பாலத்திற்கு சென்று, அங்கு அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த கலைஞர் அவர்களின் திருஉருவச் சிலைக்கு மலர் தூவி, மரியாதை செலுத்தினார்.

ஆலந்தூர் கத்திப்பாராவில் அமைந்துள்ள அடுக்கு மேம்பாலத்தை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் திறந்து வைத்து சாதனைபடைத்தது சம்மந்தமாக அமைச்சர் தா.மோ.அன்பரசன் ஆற்றிய உரை:

ஒன்றியத்தில் ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சியின் போது, தமிழ்நாட்டின் முதல்வராக இருந்து முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வேண்டுகோளை ஏற்று, மத்திய அமைச்சராக இருந்த அண்ணன் டி.ஆர்.பாலு அவர்களின் பெரும் முயற்சியால், ரூ.486 கோடி மதிப்பீட்டில் அழகிய அடுக்கு மேம்பாலம் அமைத்து கலைஞர் அவர்களின் திருக்கரங்களால் 26.10.2008 தீபாவளி அன்று திறந்து வைக்கப்பட்டது.

ஆசியாவிலேயே பட்டாம் பூச்சி வடிவில் வடிவமைக்கப்பட்ட அழகிய அடுக்கு மேம்பாலமாக அமைந்துள்ளது. அவருடைய பிறந்தநாளில் அவர் செய்த இந்த மிகப்பெரிய சாதனையை மக்கள் அனைவரும் அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவே இம்மேம்பாலத்தில் கலைஞரின் திருஉருவச் சிலைக்கு மலர்தூவி, மரியாதை செலுத்தி மக்களுக்கு இனிப்புகளை வழங்கி மகிழ்ந்துள்ளோம்.

சென்னை மாநகர மக்களின் போக்குவரத்து நெரிசலை குறைப்பதற்காக அமைக்கப்பட்டுள்ள இம்மேம்பாலம் மக்களுக்கு மிகவும் பயனுள்ளதாக உள்ளது.

உலகம் இருக்கும் வரை இந்த அழகிய பாலத்தை அமைத்து தந்த கலைஞரின் புகழ் என்றென்றைக்கும் நிலைத்து நிற்கும். இன்றைக்கு கலைஞர் அவர்களின் மறு உருவாக இருக்க கூடிய நம்முடைய முதல்வர் அவர்களும் கலைஞரைப்போலவே இந்தியாவிற்கு வழிகாட்டக்கூடிய நல்ல பல திட்டங்களை கொண்டு வந்து சாதனைபடைத்து வருகிறார் என்பதை பெருமையோடு கூறிக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

இந்த இரு நிகழ்ச்சிகளிலும் ஆலந்தூர் மண்டலக்குழுத் தலைவர் என்.சன்திரன், பகுதி செயலாளர் ப.குணாளன், பொதுக்குழு உறுப்பினர்கள் எம்.எஸ்,கே.இப்ராகிம், ஆர். டி.பூபாலன், கீதா ஆனந்தன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ், வட்டச் செயலாளர்கள் மா.கோ.கருணாநிதி, கே. பி.முரளி கிருஷ்ணன், மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் பிருந்தாஸ்ரீ முரளிகிருஷ்ணன், பாரதி வெங்கடேசன், மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் கலாநிதி மற்றும் ஏராளமான கழகத்தினரும், பொருமக்களும் பங்கேற்றனர்.



ஜீன் 3 முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்த நாளை முன்னிட்டு காஞ்சி தெற்கு மாவட்ட உத்திரமேரூர் ஒன்றிய பேரூர் திமுக சார்பில் உத்திரமேரூர் பேருந்து நிலையத்தில் 2000க்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.இதில் காஞ்சி தெற்கு மாவட்ட செயலாளர் உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பினர் க.சுந்தர் கலந்து கொண்டு பொதுமக்களுக்கு அறுசுவை உணவுகளை பரிமாறி உபசரித்தார். இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம்,ஒன்றிய செயலாளர் ஞானசேகரன், பேரூர் செயலாளர் பாரி வள்ளல், உள்ளாட்சி பிரதிநிதிகள், ஒன்றிய பேரூர் நிர்வாகிகள்,கிளை கழக நிர்வாகிகள், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.